# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

**சென்னை- 600 106**

## குடியரசு தினவிழா

---

செய்தி வெளியீடு எண். 1/2021 நாள் 26.01.2021

2021 -ம் ஆண்டு, குடியரசு தினவிழாவினை முன்னிட்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில் மாநில தேர்தல் ஆணையர் **முனைவர் இரா. பழனிசாமி இ.ஆ.ப.,(ஓ)** அவர்கள் தேசியக் கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

சென்னை, அரும்பாக்கம், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய வளாகத்தில் குடியரசு தின விழாவினை முன்னிட்டு இன்று (26.01.2021) தேசியக்கொடி ஏற்றும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. மாநில தேர்தல் ஆணையர் **முனைவர் இரா. பழனிசாமி இ.ஆ.ப.,(ஓ)** அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்திய பின், காவல்துறை மரியாதையை ஏற்றுக் கொண்டு இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு வழங்கி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாநில தேர்தல் ஆணைய செயலாளர் **திரு கி. பாலசுப்ரமணியம்,இ.ஆ.ப.,** அவர்கள் மற்றும் ஆணையத்தில் பணியாற்றும் உயர் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

26/1/2021

மக்கள் தொடர்பு அலுவலர்